Registered as a NewsPaper

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-IV

நாதம் -15 | திருவள்ளுவர் ஆண்டு- 2036 | தை-22 | 04-01-2005 | வெள்ளிக்கிழமை | ஓசை -352






## புலிகள் அமைப்பில் இணைந்த 23 சிறுவர்கள் வடக்குக் கிழக்கு ம.உ. அமைப்பிடம் ஒப்படைப்பு

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப்புலிகள் தமது அமைப்பில் சுய விருப்பில் இணைந்து கொண்ட 18 வயதிற்குக் குறைவான 23 சிறுவர்கள் அரசியல்துறையினரால் 18 வயதிற்குக் குறைவானவர்களை இனங்காண்பதற்காக நியமிக்கப்பட்ட விசேட குழுவினரால் இனங்காணப்பட்டு அவர்களின் பெற்றோரிடம் ஒப்படைப்பதற்காக வடக்குக் கிழக்கு மனித உரிமைகள் செயலக பணிப்பாளர் வண.பிதா கருணாரட்ணம் அடிகளாரிடம் நேற்றுக கையளித்தனர்.

இவர்களில் நால்வர் அவர்களின் பெற்றோரிடம் நேற்றுக் கையளிக்கப்பட்டனர். எஞ்சியோர் அவர்களின் பெற்றோரிடம் சேர்ப்பதற்கான முயற்சிகள் வடக்குக் கிழக்கு மனித உரிமைகள் அமைப்பின் செயலகத்தினரால் மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும், அவர்கள் அவர்களின் பெற்றோரிடம் ஒப்படைக்கப்படுவர் என வடக்குக் கிழக்கு மனித உரிமைகள் செயலகப்

(iv ஆம் பக்கம் பார்க்க)

### -சிறிலங்கா-பாக். இடையில் பாதுகாப்பு ஒப்பந்தம்-

# உயர்மட்டப் பேச்சிற்கு சந்திரிகா திங்களன்று பாகிஸ்தான் செல்கிறார்

(கொழும்பு)

**பாதுகாப்பு உடன்பாடு குறித்து பேச்சுவார்த்தை நடத்துவதற்கு மூன்று நாள் விஜயத்தை மேற்கொண்டு எதிர்வரும் திங்கள் கிழமை பாகிஸ்தான் செல்லவுள்ள சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அங்கு பாகிஸ்தான் சனாதிபதி பர்வேஸ் முசாரப்பைச் சந்திக்கவுள்ளதோடு இருதரப்பு ஒத்துழைப்புக் குறித்து புரிந்துணர்வு ஒப்பந்தங்களிலும் கைச்சாத்திடவுள்ளார்.**

இது குறித்து சிறிலங்காவிற்கான பாகிஸ்தானிய தூதுவர் மோயின் அல்குக் தெரிவிக்கையில், மூன்று நாள் விஜயத்தை மேற்கொண்டு பாகிஸ்தான் செல்லும் சிறிலங்கா சனாதிபதி பல்வேறு புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கைச்சாத்திடுவார் எனக் கூறியுள்ளார்.

ஆறு வருடங்களுக்குப் பின் பாகிஸ்தான் விஜயத்தை மேற்கொள்ளவுள்ள சிறிலங்கா சனாதிபதி 8ஆம் திகதி அந் நாட்டின் வெளிவிவகார அமைச்சர் மற்றும் வர்த்தக அமைச்சர் ஆகியோரைச் சந்திப்பார் என பாகிஸ்தானியத் தகவல்கள் தெரிவித்துள்ளன. சனாதிபதியை வரவேற்கும் உத்தியோக

(iv ஆம் பக்கம் பார்க்க)

## பாதிக்கப்பட்ட மக்களை நிவாரணம் நேரடியாகச் சென்றடைய வேண்டும்!

### ஐரோ. யூனியன் ரணிலிடம் வலியுறுத்து

இலங்கையில் சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணங்கள் நேரடியாகச் சென்றடையவேண்டும் என ஐரோப்பிய ஒன்றியம் கேட்டுள்ளது. நேற்று எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க பிரசெல்ஸ்ஸில் ஐரோப்பிய ஒன்றியத்தின் உப தலைவர் மாகே வொல்ஸடோவைச் சந்தித்தபோதே இந்த வலியுறுத்தல் விடுக்கப்பட்டது.

வடக்குக் கிழக்குக்கு நிவாரணங்களை

(iv ஆம் பக்கம்பார்க்க)

## சுனாமி உதவியையும் சமாதான முயற்சியையும் இணைத்துப் பார்க்க முடியாதென்கிறார் சந்திரிகா

சுனாமியால் பாதிக்கப்பட்ட நாட்டைக் கட்டியெழுப்பும் வகையில் சர்வ தேச சமூகத்தால் வழங்கப்படும் உதவிகளையும் சமாதானமுயற்சிகளையும் இணைத்துப் பார்க்க முடியாது என சிறிலங்கா சனாதிபதி தெரிவித்துள்ளார்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கான விஜயத்தின் ஒரு பகுதியாக கொழும்பிற்கு வந்து சேர்ந்த நெதர்லாந்து வெளிவிவகார அமைச்சர் பேனாட் பொட் சனாதிபதி சந்திரிகாவை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியபோதே சனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார். நேற்று சனாதிபதி மாளிகையில் இச்சந்திப்பு இடம்பெற்றுள்ளது. சுனாமி அனர்த்தம் பற்றியும், கட்டடங்களைப் புனர்நிர்மாணம் செய்வது பற்றியும் சனாதிபதி நெதர்லாந்து வெளிவிவகார அமைச்சருக்கு விளக்கியுள்ளார்.

(iv ஆம் பக்கம்பார்க்க)

## நாட்டைக் கட்டியெழுப்ப அனைத்துக் கட்சி ஆதரவைப் பெற அரசாங்கம் முனையவில்லை

### -ஐக்கிய தேசியக் கட்சி குற்றச்சாட்டு-

சுனாமியின் பின்னர் நாட்டைக் கட்டி யெழுப்பும் நடவடிக்கைகளுக்காக அனைத்துக் கட்சிகளினதும் ஆதரவைப் பெறுவதில் அரசாங்கம் முனைப்புக் காட்டவில்லை என ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது. பாராளுமன்ற உறுப்பினர் ஜி.எல் பீரிஸ் இந்தக் குற்றச்சாட்டைச் சுமத்தியுள்ளார். நேற்று கொழும்பில் நடைபெற்ற ஊடக மாநாட்டில் உரையாற்றிய அவர்,

(iv ஆம் பக்கம் பார்க்க)

## நிவாரணத்தில் பாகுபாடு தொடரின் அரசுடன் இணக்கப்பாடு ஏற்படாது

### த. கூட்டமைப்பினர் நெதர்லாந்து அமைச்சரிடம் தெரிவிப்பு

(கொழும்பு)

சிறிலங்காவுக்கு விஜயம் செய்துள்ள நெதர்லாந்தின் வெளிவிவகார அமைச்சர் பேர்னாட்பொட்டை தமிழ்தேசிய கூட்டமைப்பினர் நேற்று சந்தித்துப் பேசியுள்ளனர். நேற்றைய சந்திப்பின் போது சிறிலங்கா அரசாங்கம் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வ்ழங்கும் நிவாரண உதவிகளில் பாகுபாடுகள் காண்பிப்பதாகவும் இவ்வாறான நிலை தொடர்ந்தால் அரசாங்கத்திற்கும், தமிழ் மக்களுக்கும

(iv ஆம் பக்கம் பார்க்க)

## அமெ. விடம் இருந்து உலங்குவானூர்திகளை பெற்றுத்தருமாறு விமானப்படை கோரிக்கை

### பணத்தை 5 வருடங்களில் பகுதிபகுதியாகச் செலுத்துமாறும் சிபார்சு

போக்குவரத்து பெல் 412 ரக உலங்கு வானூர்திகள் உட்படப் போக்குவரத்து உலங்கு வானூர்திகளை அமெரிக்காவிடமிருந்து பெற்றுத்தருமாறு சிறிலங்காவின் விமானப்படை அரசிடம் கேட்டுள் ளது.

இத்தகவலை அமெரிக்காவிலிருந்து வெளிவரும் “பிளைட் இன்ரநசனல்” என்ற சஞ்சிகை

(iv ஆம் பக்கம் பார்க்க)



ஹேர்க்குளிஸ் விமானம்

# சிறிலங்காவின் சுதந்திர தினமான இன்று தமிழர் தாயகம் எங்கும் கறுப்பு நாள்!

### — பல்வேறு பொது அமைப்புக்கள், மாணவர் அமைப்புக்கள் அழைப்பு —

## 41 ஆம் நாள் நினைவலைகள்

அன்னை மடியில்
14-05-1945

ஆழிப்பேரலையில்
26-12-2004

அமரர்

**பரமு-கமலாதேவி**

(வண்ணாங்குளம்,
முல்லைத்தீவு)



அன்பின் திருவுருவே பாசக்கடலே
அரவணைக்கும் கரம்கொண்டவளே-அம்மா
நினைத்தோமா-நீரலையில் செல்வாய் என்று
வாராயோ எம் கண்ணீர் அலை காண
விரைந்து

ஆனந்தபவன்,
வண்ணாங்குளம்,
முல்லைத்தீவு.

பிரிவால் துயருறும்
கணவன்,மகள்,மருமகன்
பேரப்பிள்ளைகள்.

(5671)

## 41 ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 07 - 05 - 1960

**புத்மநாதன் இந்திராதேவி**
[இந்திரா]
(கள்ளப்பாடு,முல்லைத்தீவு)

இறப்பு 26 - 12 - 2004



ஆழிப் பேரலையின் கோரத்தாண்டவத்தால்
அள்ளிவந்த பெருங் கங்கையிலே
காலன்தான் உங்களைக் கொண்டு போனாலும்
கலங்க மறுக்குமோ எம் நெஞ்சங்கள்

என்றும் உன் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்

தகவல்:-சகோதரர்கள்,
சியாமளாதேவி,த.லோகேந்திரன்,
த.தவேந்திரன்,த.தனேந்திரன். (5624)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி



**சிவபாலன் கமலநாயகி**
பிறப்பு:- 1972.05.31



**சிவபாலன் யதுர்சன்**
பிறப்பு:- 1996.07.30



**சிவபாலன் பிரவின்**
பிறப்பு:- 2000.01.24

**இறப்பு:- 26.12.2004**

அன்று கடற் கோளினால் ஏற்பட்ட விபத்தின்போது சாவடைந்த எமது கழக உறுப்பினர் திரு. க. சிவபாலனின் மனைவி பிள்ளைகளின் 45 ஆம் நாள் நினைவு அஞ்சலியையும், தெரிவித்து எமது கண்ணீர் அஞ்சலியையும் காணிக்கையாக்குகின்றோம்.

தேவிபுரம்சந்தி,
வள்ளிபுனம்.

நண்பர்கள் விளையாட்டுக்கழகம்,
உடையார்கட்டு

(5626)


## வரிவிளம்பரம்

**பொய்கை**

சகலவிதமான கணினி வேலைகளும் விரைவாக செய்துகொடுக்கப்படும். அத்துடன் அன்பளிப்புப் பொருட்கள், அழகுசாதனப் பொருட்களைப் பெற்றுக்கொள்ள நாடுங்கள். பொய்கை. கனகபுரம், தெரு கிளிநொச்சி. (5627)

**காணி விற்பனைக்குண்டு**

ஏ-9 வீதியிலிருந்து வண்டோட்டி னூடாக 500 மீற்றர் தூரத்திலுள்ள 1/2ஏக்கர் உறுதிக்காணி, கட்டுக் கிணறு, வீட்டுடன் கூடியது விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு கோ.சிவராஜா, இல39, திரு நகர் வடக்கு,கிளிநொச்சி. (5633)


# சுனாமி பேபியின் டி.என்.ஏ பரிசோதனை அடுத்தவாரம் கொழும்பில் நடைபெறும்

சுனாமிஅனர்த்தத்திலிருந்து உயிர்தப்பிய கல்முனைப் பிரதேச குழந்தையின் டி.என்.ஏ பரிசோதனை அடுத்தவாரம் கொழும்பில் இடம் பெறவுள்ளது என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சுனாமி பேபி எனப்படும் இக் குழந்தையினதும் அதற்கு உரிமை கோரும் பெற்றோரினதும் பாதுகாப்புக் கருதி டி.என்.ஏ சோதனை நடைபெறும் தினம் இரகசியமாக வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது சோதனையின் அறிக்கை நேரடியாக நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆறாம் மாதநினைவஞ்சலி

அன்னை மடியில
18 09 1972



ஆண்டவன் மடியில்
21 07 2004

**K.சசிகரன்**

ஊரார் போற்றிடவே உத்தமனாய் வந்துதித்த
எம் உதயச் சூரியனே
நட்புறவை வளர்த்திடவே நல்லெண்ணம் கொண்டீரே
எத்துன்பம் வந்தாலும் அத்தனையும் சகித்திடுவீர்
மக்களைக் காத்திடவே மனதை மருந்தாக்கி
மருத்துவத்தைத் தொடரவே வெளிநாடு சென்றீரே
ஒரு நொடியேனும் கதைத்திடவென்று
ஒப்பற்ற ஆசை வளர்த்திருந்தோமே
ஓடி மறைந்ததே உங்களது ஜீவன்
உன் முகம் காண தத்தளிக்கும் எம் உள்ளம்
மாதங்கள் ஆறும் மறைந்து போயினவே
நீ வளர்த்த பாசம் நிலை கொண்ட எம் நெஞ்சில்
அழிவில்லா நதியைப்போல் ஊற்றெடுக்கும்

உங்களது ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்தனை செய்கின்றேன்.
ஓம்சாந்தி ஓம்சாந்தி ஓம்சாந்தி

**என்றும் உங்கள் நினைவுடன்**
**தங்கைகள் - மு.நளாயினி,தர்மபுரம்,**
**மு.மாலா,அக்கராயன்.**

(5629)

## 41 ஆம் நாள் நினைவஞ்சலியும், அந்தியேட்டி அழைப்பும்

பிறப்பு 10 - 07 - 1935



இறப்பு 26 - 12 - 2004

**திருமதி கணபதிப்பிள்ளை வள்ளிப்பிள்ளை**
(உடுத்துறை,தாளையடி)

**26. 12. 2004 அன்று ஏற்பட்ட கடற்புவி அனர்த்தத்தின் போது அகால மரணமடைந்த அன்னாரின் மரணச் செய்திகேட்டு எமக்குப் பலவழிகளிலும் ஆறுதல் கூறிய அனைவருக்கும் நன்றியைத் தெரிவிப்பதோடு 04. 02. 2004 இன்று அன்னாரின் வீட்டில் நடைபெறும் அந்தியேட்டி நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்**

நிரந்தர முகவரி,
உடுத்துறை,
தாளையடி.(5616)

தகவல்
குடும்பத்தினர்.

—பாதிக்கப்பட்ட வடமராட்சி மீனவருக்கு—

# 14 படகுகள், வலைகள், இயந்திரங்களை "கியூ மெடிக்கா" நிறுவனம் வழங்கியது

(யாழ்ப்பாணம்)

சுனாமி கடல் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட வடமராட்சி மீனவர்களுக்கு நேற்று ஒரு தொகுதி படகுகள், வலைகள்,படகுகளுக்குரிய வெளியிணைப்பு இயந்திரங்கள் வழங்கப்பட்டன

வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசத்தினூடாக ஜேர்மன் நிறுவனமான "கியூமெடிக்கா" இவ் உதவிப் பொருட்களை வழங்கியது.

நேற்றுப் பகல் 11.00 மணிக்கு பருத்தித்துறை புனித தொம்மையார் ஆலயத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் 14 மீன்பிடிப்படகுகளும், அதற்குரிய வெளியிணைப்பு இயந்திரங்களும்,வலைகளுமே வழங்கப்பட்டன.

நேற்று வழங்கப்பட்ட இவ் உதவிப்பொருட்கள் தும்பளை கிழக்குக் கிராம மீனவர்களுக்கு வழ்ங்கப்பட்டதாகவும் இந்நிறுவனம் யாழ். மாவட்டத்தில் ஒவ்வொரு பாதிக்கப்பட்ட மீனவக் கிராமங்களைச் சேர்ந்த மீனவர்களுக்கு தொடர்ந்து இவ்வுதவிப் பொருட்களை பகுதி பகுதியாக வழங்கும் எனவும் இவ்வாறு 750 படகுகளும்,இயந்திரங்களும் அதற்குரிய வலைகளும் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

நேற்றைய இந்நிகழ்வு யாழ்.மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் சி.இளம்பரிதி, விடுதலைப் புலிகளின் கடற்படையின் துணைத்தளபதி செழியன் மற்றும் போராளி அருணன் பாராளுமன்ற உறுப்பினர்களான சிவாஜிலிங்கம்,கஜேந்திரன்,பத்மினி சிதம்பரநாதன்,சிவனேசன்,மற்றும் யாழ்.மாவட்ட அரச அதிபர் கணேஷ்,யாழ்.மாவட்ட கடற்றொழில் திணைக்கள உதவிப் பணிப்பாளர் தர்மலிங்கம் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். (27,செ)

—பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாலய—

# கட்டட நிர்மாணிப்பிற்கு கடற்படை தடை விதிப்பு

(யாழ்ப்பாணம்)

பொன்னாலைப் பகுதியிலுள்ள பாடசாலையொன்றில் மேற்கொள்ளப்படவிருந்த கட்டட நிர்மாணப் பணிகள் கடற்படையினரால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

நிகொட் அமைப்பின் மூலம் பொன்னாலை வரதராஜப்பெருமாள் வித்தியாலயத்தில் மேற்கொள்ளப்படவிருந்த மாடிக்கட்டட நிர்மாண வேலைகளே கடற்படையினரால் தடைப்பட்டுள்ளது.

கடற்படையின் உயர் பாதுகாப்பு வலயப்பகுதியினுள் அமைந்துள்ள இப்பாடசாலைக் கான கட்டட மூலப் பொருட்களை உள்ளே கொண்டு செல்வதற்கான அனுமதியை கடற்படை வழங்க மறுத்து வருவதானாலேயே இந்நிலை ஏற்பட்டுள்ளது. குறித்த பாடசாலையில் கட்டப்படவுள்ள இரு மாடிக்கட்டடத்திற்கான ஒப்பந்தக்காரராக தனியார் ஒருவர் நிகொட் அமைப்பினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

அவ்வாறு நியமிக்கப்பட்ட ஒப்பந்தக்காரர் குறித்த வேலைக்கான கட்டடப் பொருட்களை எடுத்துச் சென்றவேளையில் முன்னரங்க காவல் நிலையிலுள்ள கடற்படையினர் அவற்றை உள்ளே கொண்டு செல்ல அனுமதிக்கவில்லையெனக் கூறப்படுகிறது.

உள்ளே கட்டடப் பொருட்களைக் கொண்டு செல்வதற்கான புதிய அனுமதியினை பெற்றுக்கொள்ள வேண்டுமெனக் கூறியே கடற்படையினர் அவற்றைத் திருப்பியனுப்பியுள்ளனர்.

இதேவேளை, பருத்தித்துறை மற்றும் தெல்லிப்பழை இராணுவச் சோதனைச் சாவடிகளிலும் இவ்வாறான இழுபறிகள் நீடிப்பதால், பாடசாலைக் கட்டட வேலைகள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.


## தமிழீழப் போக்குவரவுக் கழகம்

## சுமையுந்து / இழுபொறி

### ஓட்டுநர் (பயிலுநர்) பணிக்கான நேர்முகத்தேர்வு

தமிழீழ போக்குவரவுக் கழக சுமையுந்து,இழுபொறி ஓட்டுநர் (பயிலுநர்) பணிக்கு விண்ணப்பம் செலுத்தியவர்களுக்கான நேர் முகத்தேர்வு 08.02.2005 ஆம் நாள் செவ்வாய் காலை 9.30 மணி தொடக்கம் பகல் 2.00 மணி வரை விசுவமடு றெட்பானா ஒளிநிலா திரையரங்கிற்கு அருகாமையிலுள்ள தமிழீழப் போக்குவரவுக்கழகம் நடுவப்பணிமனையில் நடைபெறும்.

மேற்படி பணிக்கு விண்ணப்பம் செய்தோர் கல்வித்தகைமை,அகவை ஆகியவற்றினை உறுதிப்படுத்தும் உரிய ஆவணங்களுடன் வருகை தருமாறு வேண்டுகின்றோம்.

முகாமையாளர்,
ஆளணி ஆளுகைப்பகுதி,
தமிழீழப் போக்குவரவுக் கழகம்,
நடுவப்பணிமனை,
விசுவமடு.

(சி.11307)



## பணிநிலை வேண்டுகை

கீழ்வரும் பணிநிலைகளுக்குத் தகைமையுடையவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன. தகைமையுடைவர்கள் தங்களது தன்வரலாறடங்கிய (சுயவிரபம்) வேண்டுகைகளை 2005.02.15ஆம் நாளுக்கு முன்னதாக எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைக்கவும்.

**பணிநிலை:-**

01) அலுவலர் (ஆண்கள்)
02) உதவி அலுவலர் (ஆண்கள்)
03) கணினித் தரவுப் பதியுநர் (இருபாலாரும்)

**கல்வித் தகைமை**

பணிநிலை 01) க.பொ.த. (உ/த) பரீட்சையில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்
பணிநிலை 02) க.பொ.த. (சா/த) பரீட்சையில் குறைந்தது 04 பாடங்களில் தேர்ச்சி அடைந்திருத்தல் வேண்டும்.
பணிநிலை 03) க.பொ.த. (சா/த) பரீட்சையில் தோற்றியிருப்பதுடன், எம்.எஸ்.ஒபிஸ் கற்கைநெறி முழுமை செய்திருத்தல் வேண்டும்.

வேண்டுகை அனுப்ப வேண்டிய முகவரி - பொறுப்பாளர்,
மனிதவள மேம்பாட்டுப் பகுதி,
நாகதம்பிரான் வீதி,
கிளிநொச்சி.

நேர்முகத் தேர்வு நடைபெறும் நாள் :- 2005-02-23 காலை 10.00 மணிக்கு
நேர்முகத் தேர்வு நடைபெறும் இடம் :- மனிதவள மேம்பாட்டுப் பகுதி,
நாகதம்பிரான் வீதி,
கிளிநொச்சி.

குறிப்பு :- நேர்முகத் தேர்வுக்குக் கடிதம் அனுப்பப்படமாட்டாது. நேர்முகத் தேர்வுக்குச் சமுகமளிப்பவர்கள் தகைமைச் சான்றிதழ்களுடன் வரவும்.

ஆளுகை
மனிதவள மேம்பாட்டுப் பகுதி

(சி-11310)


## 41 ஆம் நாள் நினைவஞ்சலி

## லோகேந்திரன் — இரட்னேஸ்வரி (திலகம்)

செல்வபுரம், முல்லைத்தீவு.



பிறப்பு 13—03—1962

இறப்பு 26 — 12 —2004

நெற்றித்திலகமே முற்றத்து றோசாவே
பற்றறுந்து போனதே பற்றவந்த
சுனாமியால்
உற்ற துன்பம் நீக்கி உடல்தேற
ஊட்டந்தந்தும்
முற்றும் வரண்டு போச்சே முழுநிலவு
மறைந்ததால்

வீடுகள் இடிந்தாலும் பாடுகள் தான்
அழிந்தாலும்
கூட்டில் குயிலிருந்தால் கூடிநாம்
வாழ்ந்திருப்போம்
கூடுமில்லை குயிலுமில்லை
வீடுமில்லை உறவுமில்லை
வாடுகின்றோம் அம்மா வர்ண்ட இம்
மானிலத்தில்.

ஆழிப் பேரலையின் கோரத்தாண்டவத்தால் செல்வபுரம், முல்லைத்தீவுப் பகுதியில் அகாலச் சாவடைந்த எமது உறவுகளின் பிரிவுச் செய்தி அறிந்து எமது துயரத்தில் பங்கு கொண்டு எம்மை ஆறுதல்படுத்தி எமக்குப் பல வழிகளிலும் உதவிகள் புரிந்த, அனைவருக்கும் எமது கண்ணீரோடு கூடிய நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு, 04.02.2005 இன்று 2.ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பில் நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு ஊரார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் வேண்டுகிறோம்.

த.முகவரி:-
நாகேந்திரம்,
வெதுப்பகம்,
2ஆம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு.

பிரிவால் துயருறும்
கணவர் த.லோகேந்திரன்
பிள்ளைகள்,சுமணன்,
சுதணன் (5623)

### வவு. தெற்கு தமிழ் பிரிவின்

# புதிய பிரதேச செயலாளரை மாற்றக் கோரி

# வவுனியாவில் மக்கள் ஆர்ப்பாட்டம்!

வவுனியா தெற்கு தமிழ்ப் பிரிவின் புதிய பிரதேச செயலாளரை இடம் மாற்றக் கோரி பொது மக்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர்.

நேற்றுக் காலை 10.30 மணி முதல் சுமார் ஒரு மணிநேரம் பிரதேச செயலகத்திற்கு முன்னால் சுலோக அட்டைகளைத் தாங்கியவாறு மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ஆர்ப்பாட்டக்காரர்களைப் பிரதேச செயலக வளவிற்குள் செல்லவிடாது பொலிசார் தடுத்தையடுத்து. செயலக வாசலில் வைத்து மகஜர்களைப் பெற்றுக் கொண்ட மாவட்ட அரசாங்க அதிபர் சி.சண்முகம் மக்களுடைய எதிர்ப்பு விடயத்தைப் பொது நிர்வாக உள்நாட்டு அமைச்சின் செயலாளருக்கு அறிவிப்பதாகத் தெரிவித்தார். சம்பவ இடத்திற்கு வருகை தந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான சிவநாதன் கிஷோர், செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன், வினோ நோகராதலிங்கம் மற்றும் வன்னி மாவட்டப் புனர்வாழ்வு அபிவிருத்தி அமைச்சின் வவுனியா இணைப்பாளர் ஜனாப் அனாவ் ஆகியோரிடமும் பொதுமக்கள் மகஜர்களைக் கையளித்தனர். செட்டிகுளம் பிரதேச செயலாளராக இருந்த அவர், கடந்த செவ்வாய்க்கிழமை முதல் வவுனியா தெற்கு தமிழ்ப் பிரிவின் பிரதேச செயலாளராக நியமனம் செய்யப்பட்டதிற்கான உத்தியோகபூர்வ கடிதத்தினை அரசாங்க அதிபரிடம் கையளித்து அலுவலகப் பணிகளை மேற்கொண்டுள்ளார். ஆனால் இவரது நியமனத்தை வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆட்சேபித்து அரசிடம் முறைப்பாடு செய்துள்ளனர். கடந்த மாதம் 18ஆம் திகதியிடப்பட்ட பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளரினால் பெப்ரவரி முதலாம் திகதி முதல் இந்த நியமனம் அமுலுக்கு வரும் வகையில் வழங்கப்பட்டுள்ளது என வவுனியா மாவட்ட செயலக சிரேஷ்ட உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## புலிகள்..

பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இவர்கள்,அவர்களின் பெற்றோா இனங்காணப்படும்வரை வடக்குக்கிழக்கு மனித உரிமைகள் செயலகத்தில் இருப்பர் எனவும் அந்தப் பேச்சாளர் கூறினார்.

## நிவாரணத்தில்..

இடையில்புரிந்துணர்வுடன் கூடிய இணக்கப்பாடு ஏற்படும் வாய்ப்புகள் தோன்றாது என்பதை தமிழ்க்கூட்டமைப்பினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.இன்றைய சந்திப்பில் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களான இரா சம்பந்தன் ஜோசப் பரராஜசிங்கம் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் கலந்து கொண்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (32)

## பாதிக்கப்பட்ட...

வழங்குவதற்காக அரசாங்கமும், தமிழீழ விடுதலைப்புலிகளும் இணைந்த பொதுக் கட்டமைப்பு ஒன்று அமைக்கப்படவேண்டும் என்றும் இதன்போது வோல்ஸ்டோ கேட்டுக்கொண்டார். இதற்குத் தமது இணக்கத்தை வெளியிட்ட ரணில் விக்கிரமசிங்க இந்தப் பகுதிகளில் முஸ்லிம் மக்களும் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளமையால் குறிப்பிட்ட கட்டமைப்பில் முஸ்லிம் பிரதிநிதிகளும் பங்கேற்க வேண்டும் என்றும் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளைத் தொடர்வதற்கு சனாதிபதி சந்திரிகாவே தடையாக இருக்கிறார் எனவும் தற்போது ஆளும் அரசு சிறிலாங்காவை ஒரு யுத்த நிலைக்கே இட்டுச் செல்கிறது எனவும் ஐரோப்பிய நாடுகளின் நன்கொடைகள் பொதுமக்களைச் சென்றடையவில்லை எனவும் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை ரணில் விக்கிரமசிங்க ஐரோப்பிய ஒன்றியத்தின் ஆசிய பிராந்திய உப தலைவி ரீனா ஜில்லையையும் சந்தித்தார். இதன்போது சுனாமியினால் பாதிக்கப்பட்ட நாடுகள் தமது வேண்டுகோள்களை முன்வைத்தால் ஐரோப்பிய ஒன்றியம் உதவி வழங்கத் தயாராகவுள்ளதாக அவர் உறுதியளித்தார்.

ரணில் விக்கிரமசிங்க குழுவினர் நாளை தமது சந்திப்புக்களை முடித்துக் கொண்டு லண்டன் செல்லவுள்ளார்கள்.

## நாட்டைக்....

பாராளுமன்றத்தை மையப்படுத்தி அரசாங்கம் சுனாமியின் நிவாரணப் பணிகளை மேற்கொண்டிருந்தால் உரிய நிவாரணங்களை வழங்கியிருக்க முடியும். அத்துடன் வெளிநாடுகளும் அதிகளவான நிதியுதவிகளை இலங்கைக்கு வழங்கியிருக்கும் என்றும் ஜி எல் பீரிஸ் குறிப்பிட்டார். அரசாங்கம் சுனாமி நிவாரணங்கள் உரிய முறையில் விநியோகிக்கப்படவில்லை என்பதை ஏற்றுக்கொண்டிருப்பதை அவர் சுட்டிக்காட்டினார். எஸ். பி. திஸாநாயக்க அரசியல் கைதியாக இருந்து வருகின்ற நிலையில் அவருக்கு மருத்துவ சிகிச்சைகள் அளிக்கப்படாமை குறித்துத் தமது கட்சியின் அதிருப்தியை வெளியிட்ட ஜி. எல். பீரிஸ் எஸ். பி. திஸாநாயக்கவின் உயிருக்கு ஊறு நேருமானால் அதற்கு அரசாங்கமே பொறுபபு என்றும் குறிப்பிட்டார்.இதேவேளை அரசாங்க ஊடகம் எதிர்கட்சிகளை விமர்சிக்காமல் தற்போதைய நாட்டின் நிலைமையைக் கருத்திற் கொண்டு எதிர்க்கட்சிகளை அரவணைத்துச் செல்ல வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜெயசூரிய சனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில் தெரிவித்துள்ளார்.சுனாமிக்குப் பின்னர் கடற்கரையில் இருந்து 100 மீற்றர் தூரத்தில் கட்டடங்கள் அமைக்கப்படவேண்டும் என்பதில் மாத்திரமே அரசாங்கத்துடன் ஐக்கிய தேசியக் கட்சி முரண்பட்டுள்ளமையை அவர் தமது கடிதத்தில் சுடடிக்காட்டியுள்ளார்.

இந்த நிலையில் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க சுனாமியின் பாதிப்பிலிருந்து மக்கள் மீளத்திரும்பும் முன்னரே சனாதிபதித் தேர்தல் பிரசாரங்களில் ஈடுபட்டுள்ளதாக தகவல்துறை அமைச்சர் மங்கள சமரவீர குற்றம் சுமத்தியுள்ளார். ஐக்கிய தேசியக் கட்சி அண்மையில் வெளியிட்ட தேசியக் கொள்கைப் பிரகடனமானது சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இதற்குள் நாட்டைக் கட்டியெழுப்பும் முகமாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் உதவித்தலைவர் கரு ஜெயசூரிய ஆகியோர் நல்ல கருத்துக்களை முன்வைக்கின்ற போதும் கட்சியின் ஏனையவர்கள் அரசியல் நலனைக் கருத்திற்கொண்டு செயற்பட்டு வருவதாகவும் மங்கள சமரவீர குற்றம் சுமத்தியுள்ளார்.

## கலந்துரையாடல்

2004/2005 கல்வி ஆண்டுக்காக கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து பல்கலைக்கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான கலந்துரையாடல் வரும் ஞாயிற்றுக் கிழமை காலை 10.00 மணிக்கு கிளி. மாவட்ட பல்கலைக்கழக புகுமுக மாணவர் ஒன்றியத்தில் நடைபெற இருப்பதினால் அனைத்து மாணவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கிளி.மாவட்ட பல்கலைக்கழக புகுமுக மாணவர் ஒன்றியத்தலைவர் கேட்டுக்கொள்கின்றார்.

## உயர்மட்ட....

பூர்வ நிகழ்வினை அடுத்து பாகிஸ்தானிய சனாதிபதி பர்வேஸ் முஷாரப்புடனான பேச்சுக்கள் இடம் பெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. பாகிஸ்தான் ஏற்கனவே இராணுவப்' பயிற்சி உள்ளிட்ட இலங்கை உடன்படும் இராணுவ ரீதியான உதவிகளை வழங்க இணக்கம் தெரிவித்துள்ளது.

அத்துடன் சுமார் இரண்டு கோடி அமெரிக்க டொலர்கள் பெறுமதியான ஆயுதங்களைக் கடனுக்கு வழங்குத் தயார் என பாகிஸ்தான் அண்மையில் சிறிலங்காவிற்கு அறிவித்துள்ளது குறித்து சிறிலங்கா அரசுத் தரப்பு ஆலோசனை நடத்தியது. இது குறித்தும் சனாதிபதி பாகிஸ்தான் அரசுத்தரப்புக்களுடன் பேசுவார் எனத் தெரியவருகிறது. எதிர்வரும் 9ஆம் திகதி பாகிஸ்தான் சனாதிபதி மற்றும் பர்வேஸ் முஷாரப் ஆகியோரையும் மற்றும் உயர் மட்ட அரசுத் தலைவர்களையும் சனாதிபதி சந்திரிகா சந்திப்பார். அங்கு தங்கியிருக்கும் காலப்பகுதியில் இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக வாணிப உறவுகளை வலுப்படுத்தும் நோக்குடன் சுதந்திர வர்த்தக உடன்பாடு மற்றும் விவசாயம் ஆகியவை தொடர்பாக இரு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படும் என்று அறியவருகிறது.

இந்தியாவுடனான பாதுகாப்பு உடன்படிக்கை முஸ்தீபுக்குப் பல்வேறு தரப்புக்களிலிருந்தும் எதிர்ப்புக் கிளம்பியதை அடுத்து சீனாவுடன் அண்மையில் பாதுகாப்பு உடன்பாடு ஒன்றைச் செய்து கொண்ட சிறிலங்கா அரசு, அண்மையில் ஈரானிடம் ஆயுதங்கள் வாங்கவும் தனது உயர்மட்ட படையதிகாரிகள் குழுவை அனுப்பியிருந்தது. அதேவேளை, ஆழிப் பேரலை நிவாரண நிதியாக வெளிநாடுகள் அள்ளிக்கொடுத்த நிதியில் கடற்படைக்குத் தேவையான முக்கிய தளபாடங்கள் மற்றும் அதிவேக அதிரடிப்படகுகள் என்பவற்றையும் வாங்க கடற்படைத்தளபதி தயா சந்தகிரி அரசிடம் அவசரமாக விண்ணப்பித்திருந்தார். அத்துடன், பலாலி விமான ஓடுபாதையைச் சீரமைத்து கனரக யுத்த விமானங்கள் வந்திறங்க ஏற்றவாறு விமான நிலையத்தைத் தனது சொந்தச் செலவிலேயே அரசு புனரமைத்து வருகிறது. இராணுவ ரீதியான தயார்ப்படுத்தல்களின் ஒரு அங்கமான தற்போது சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பாகிஸ்தானுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொள்ள விரைகிறார்.

# ஆளும் கூட்டணிக்குள்ளான முரண்பாடுகள் ஆராயப்பட வேண்டும்

### விமல் வீரவன்ச சனாதிபதியிடம் தெரிவிப்பு

ஆளும் கூட்டணிக்குள் உள்ள முரண்பாடுகளைக் களைந்து நாட்டின் அனைத்துச்செயற்பாடுகளையும் ஒருமித்து முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தவேண்டும் என ஜே.வி.பி யின் பிரச்சாரச் செயலரும், பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச சனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளதாகத் தெரியவருகிறது.

இதனை சுதந்திரக்கட்சி தரப்பினரும் ஏற்றுக் கொண்ட அதேவேளை சுனாமி அனர்த்தத்தின் பின் உடனடியான முடிவுகளை எடுக்க வேண்டும் என்பதற்காகவே தனித்து முடிவெடுத்துள்ளதாகவும், எனினும் அந்தத் தீர்மானங்கள் குறிப்பிட்ட அமைச்சுக்கள் ஊடாகவே நடைமுறைப் படுத்தப்படும் என சனாதிபதி தெரிவித்ததாகவும் நம்பகரமான தகவல்கள் தெரிவித்துள்ளன. (32)

# க.பொ.த.உயர்தரப் பரீட்சை ஒரு தடவையில் நடத்த முடிவு!

### – பரீட்சை பிற்போடப்படலாம்

கல்விப் பொதுத்தராதர உயர் தரப் பரீட்சையை ஒரே தடவையில் காலம் தாழ்த்தி நடாத்துவதற்கு சனாதிபதி இணக்கம் தெரிவித்திருப்பதாகத் தெரியவருகிறது. நேற்று முன்தினம் சனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற ஆளும் கூட்டணிக்கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்களின் கூட்டத்தில் இரண்டு தடவைகள் தனித்தனியாகப் பரீட்சைகளை நடாத்துவதனால் ஏற்படும் சட்டப்பிரச்சினைகள் மற்றும் புள்ளி அடிப்படையிலான பிரச்சினைகள்என்பவற்றை ஜே.வி.பி யினர் சனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டுவந்ததாகவும், அதனை முன்னாள் கல்விஅமைச்சரும் தற்போதைய மின்சக்தி எரிபொருள்துறை அமைச்சருமான சுசில்பிரேமஜெயந்தும் ஏற்றுக் கொண்டதனால் உடனடியாக இந்த விடயத்தினைக் கவனத்திற்கு எடுத்து எதிர்வரும் ஏப்பிரல் மாதத தின் பின் வேறொரு தினத்தில் பரீட்சையை நடத்த இணக்கம் காணப்பட்டுள்ளதாக உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (32)

## ஜி. ஜெயரட்ண நியமனம்

திருகோணமலை மாவட்டத்தின் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகமாக ஜி. ஜெயரட்ண நியமிக்கப்பட்டுள்ளார். சட்டம் ஒழுங்கு மற்றும் பொதுமக்கள் பாதுகாப்புத்துறை அமைச்சின் செயலாளர் திலக் ரணவிராஜா இந்த நியமனத்தை வழங்கியுள்ளார். நேற்று திருமலை சென்றுள்ள இவர் சுனாமி அனர்த்தத்தின் பின்னான நிவாரண நடவடிக்கைகள் குறித்த விடயங்களை ஆராய்ந்துள்ளார். பட்டினமும் சூழலும் பிரதேச செயலகத்தில் காலை தனது கண்காணிப்புகளை மேற்கொண்ட ஜெயரட்ண பின்னர் குச்சவெளிக்குச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(32)

## அமெ.விடம்....

சிறிலங்கா விமானப்படைத் தளபதி டொனால் பேரேராவை மேற்கோள் காட்டி செய்தியாக வெளியிட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்படுவதாவது, இதனை 5 வருடத்தில் பகுதி பகுதியாகப் பணத்தினைச் செலுத் தும் அடிப்படையில் கொள்வனவு செய்யும்படியும் கேட்கப்பட்டுள்ளது. அத்துடன் சிறிலங்கா அரசு பழுதடைந்த நிலையிலுள்ள C- 130 ஹேர்க்ளிஸ் ரக விமானங்களைப் பறப்பதற்கு ஏற்றதாகத் திருத்துவதற்கு அமெரிக்க அரசிடம் உதிரிப்பாகங்களைக் கேட்டுள்ளது. இக்கோரிக்கையை அமெரிக்க அரசாங்கமும் ஏற்றுக்கொண்டு ஒரு தொகுதி உதிரிப்பாகங்களையும், இரண்டு புதிய எஞ்சின்களையும் கூடியவிரைவில் வழங்க உடன்பட்டுள்ளதாகவும் அச்சஞ்சிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சுனாமி....

இதன்போது முக்கிய எதிர்கட்சி ஒன்று வெளிநாட்டு இராஜதந்திரிகள் மத்தியில் சுனாமி நிவாரண உதவிகளை சமாதான முயற்சிகளு டன் தொடர்புபடுத்தி அரசாங்கத்திற்கு நெருக்கடியை தோற்றுவிக்க முயல்வதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.சமாதான முயற்சிகளை ஆரம்பிக்காவிட்டால் உதவிகளை வழங்கவேண்டாம் என சிறிலங்காவின் முக்கிய அரசியல் தலைவர் ஒருவர்வேண்டுகோள் விடுத்துள்ளமை தொடர்பில் வெளிநாட்டு இராஜதந்திரிகளால் தனது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் சிறிலங்கா சனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார். தற்போது வெளிநாட்டு பயணத்தை மேற்கொண்டுள்ள எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் ஐக்கிய தேசிய கட்சி முக்கியஸ்தர் மிலிந்த மொறகொட ஆகியோர் குறித்தே சனாதிபதி இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளதாகத் தெரியவருகின்றது.

இதேவேளை நாட்டை மீண்டும் கட்டியெழுப்பும் முயற்சிக்குத் தமது நாடு பூரண ஒத்துழைப்பு வழங்குமென நெதர்லாந்து வெளிவிவகார அமைச்சர் உறுதியளித்துள்ளார். இலங்கையிலுள்ள நெதர்லாந்து தூதுவரும் இச்சந்திப்பில் கலந்து கொண்டார்.

இதேவேளை நெதர்லாந்து வெளிவிவகார அமைச்சர் நேற்றுக்காலை சிறிலங்கா வெளிவிவகார அமைச்சரையும் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். சுனாமி அனர்த்தம் பற்றிக் கலந்துரையாடியுள்ளார்.

பாதிக்கப்பட்ட இந்தோனேசியாவின் போராட்டப்பகுதியான ஆட்சே மாநிலத்திற்கு விஜயம் செய்யவுள்ள அவர், இலங்கையில் அதிகளவு பாதிக்கப்பட்டுள்ள வடக்கு-கிழக்கு பிரதேசங்களுக்கு செல்வாரா என பயண அட்டவணையில் குறிப்பிடப்படவில்லை. இதன் காரணமாக நெதர்லாந்து வாழ் தமிழ் மக்களும் மற்றும் தமிழ் அமைபபினரும் நெதர்லாந்து வெளிவிவகார அமைச்சின் தொலைநகல் ஊடாகவும், மின்னஞ்சல் ஊடாகவும், நெதர்லாந்தின் வெளிவிவகார அமைச்சர் வடக்கு-கிழக்குப் பிரதேசங்களுக்குச் செல்லவேண்டுமென்று வலியுறுத்தி வருகின்றனர்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 04ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது